**இலங்கை அணுசக்தி சபை - 2021**
---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாட்டுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர, சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழுங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி சபைக்கு கையளித்திருந்த கிரயம் ரூபா 587.5 மில்லியன் பெறுமதியான பிரதான அலுவலக கட்டிடம் சபையினால் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 பிகாரம் கடந்த காலத்தின் பிழைகள் பின்னோக்கி மீள் அறிக்கையிடலாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிராததுடன் கிரயத்திற்கு பதிலாக டென்டர் | சரியாக கணக்கிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் மீண்டும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான ரூபா 597.2 மில்லியன் மீளாய்வாண்டின் சொத்து சேர்த்தலாக கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடத்தின் திரண்ட தேய்மானமான ரூபா 21.5 மில்லியன் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகங்களின் பெறுமதி பூஜ்ஜியமான தொடர்ந்தும் பயன்படுத்தி வந்த ரூபா 67.5 மில்லியன் பெறுமதியான 214 விஞ்ஞான உபகரண உறுப்படிகள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள் மதிப்பீடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | சபையின் அழிவு எதிர்ப்பு பரிசோதனை ஆய்வுக்கூடத்திற்கு சொந்தமான கிரயம் ரூபா 33.3 மில்லியனான செயலற்ற 23 விஞ்ஞானக் கூட உபகரணங்கள் மற்றும் கிரய தகவல்கள் அற்ற 16 உபகரணங்களின் கொள்ளளவு பெறுமதி தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், தொடர்புடைய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | கடந்த கால தவறு கடந்த காலத்திற்குரியதாக மீள அறிக்கையிடுவதற்கு கடந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் 6 வரிசை உறுப்படிகள் மீள்திருத்தப்பட்டிருந்த போதிலும், இந்த மீள் திருத்தப்பட்ட உறுப்படிகள் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டில் சபைக்கு பெறப்பட்டிருந்த ரூபா 96.6 மில்லியான மூலதன அளிப்பு மற்றும் வெளிநாட்டு கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 75.9 மில்லியன் பெறுமதியான கொபோல்ட் 60 மூலப்பொருள் இருப்பு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் வருமானமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கொபோல்ட் 60 மூலப்பொருட்களின் தேய்வு பெறுமதி ரூபா 4.7 மில்லியனினாலும் அலுவலக உபகரண இயந்திரங்களின் தேய்வு ரூபா 2.3 மில்லியனினாலும் கட்டிட தேய்வு ரூபா 11.7 மில்லியனினாலும் குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 18.7 மில்லியனினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருடாந்த தேய்வு சரியாக கணிக்கப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | கொபோல்ட் 60 மூலப்பொருட்கள் இறக்குமதிக்கு தொடர்புடைய சுங்கக் கட்டணம் ரூபா 15.4 மில்லியன் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சுங்க கட்டணம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | 119 வாடிக்கையாளர் நிறுனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 2,762 தெர்மோகப்பிள் ரேடியோமீட்டர் அட்டைகள் (TLD) மதிப்பிடப்பட்டு சொத்துக்களுக்காக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பின்வரும் காரணங்களினால் TLD அட்டைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட பின்னர் நிலையான அல்லது அரை நிலையான சொத்துக்களாக கருதி கணக்கிடப்படுவதற்கு சிரமாகியது. அவ்வப்போது வெவ்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அட்டைகள் மேற்படி இருப்பின் கீழ் நிலவியமை, அட்டைகளின் தரம் அவை பயன்படுத்தப்பட்ட காலத்திற்கு இணையாக காணப்படாமை பிரகாரம் பெறுமதி தேய்வடைதல் கணிக்கப்படுவதற்கு முடியாது போதல், தொழிநுட்ப காரணங்களினால் பயன்படுத்த முடியாத நிலைக்கு வந்த பின்னர் பயன்பாட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு நேர்ந்தமை. | சொத்தின் தன்மைக்கு ஏற்ப பொருத்தமான முறைமையொன்று பயன்படுத்தி கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கொபோல்ட் 60 மூலபொருட்களின் அகற்றல் | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கைதவிர்ப்பு செலவினத்திற்காக சரியாக ஒதுக்கங்கள் |

| | | |
|---|---|---|
| செலவிற்காக (De commissioning cost) மேற்கொண்ட ஒதுக்கத்திற்காக அந்நிய செலாவணி இலாப நட்டங்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கொபோல்ட் 60 மூலப்பொருளுக்குரிய கைதவிர்ப்பு செலவு இனங்காணப்பட்டு அதற்காக எந்தவொரு ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படா கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூ. மில்லியன் | | | |
| (அ) | கொபோல்ட் 60 கொள்வனவு செய்தல் | 120.7 | ஒப்பந்த உடன்படிக்கை | BRIT நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இருப்பு | 17.0 | மெய்மையாய்வு அறிக்கைகள் | களஞ்சிய உறுப்படிகள் மெய்மையாய்வு செய்யப்பட்டதுடன் விஞ்ஞான பிரிவினால் பெற்றுக் கொடுக்கும் இருப்பு தொடர்பாக மெய்மையாய்வு அறிக்கை 2022 ஆம் ஆண்டு தொடக்கம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 1.6 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் மாதத்தில் கொபோல்ட் 60 மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக திறைச்சேரியிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 96.5 மில்லியன் குறித்த பணிக்காக பயன்படுத்தப்படாது 9 மாதக் காலம் நிறுவனத்தின் நடைமுறை கணக்கில் விறைவற்றதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வறே 2021 | 2020-2021 ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட பெறுகைகள் நடவடிக்கைகளுக்காக இந்த பணம் பெறப்பட்டதுடன் சில பெறுகை நடவடிக்கைகள் அந்நிய செலாவணி கொள்கை மாற்றமடைதல் மற்றும் விலைகள் பாரியளவில் அதிகரித்தல் போன்ற காரணங்களினால் நிறைவு செய்ய | பெறுகை திட்டம் பிரகாரம் குறித்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிறுவனத்தினுள் நிதி விளைவற்றதாக நிறுத்தி வைக்கப்படல் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டின் மூலதன செலவினத்திற்காக பெறப்பட்ட ரூபா 35.6 மில்லியனும் ஆண்டில் செலவு செய்யப்படாது சபையின் நடைமுறை கணக்கில் விளைவற்றதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | முடியாது போனது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலை உண்டானால் திறைச்சேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூடாது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம்** | | | |
| | நிதி பிரமாணம் 454 மற்றும் 715(2)(அ), (இ), (எ), (உ) மற்றும் (ஊ) | அழிவு எதிர்ப்புப் பரிசோதனை தேசிய மத்திய நிலைய விஞ்ஞான கூடங்களில் காணப்படும் விஞ்ஞான உபகரணங்களின் பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் பொருள் இருப்பு புத்தகங்கள் பேணிச் செல்லுதல் உபகரணங்களின் பொறுப்பு தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்கள் நியமித்தல், முறையான அங்கீரத்துடன் உபகரணங்களை வழங்குதல் மற்றும் முறையான அறக்கைகள் பேணிச் செல்லல் மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை. | அழிவு எதிர்ப்புப் பரிசோதனை தேசிய மத்திய நிலையத்தின் பணிப்பாளரினால் இதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | நிதி பிரகாரம் 715(இ) மற்றும் 104 (1) | உரிய அதிகாரத்தின் கீழ் பொருட்கள் வழங்கல் மற்றும் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 10.8 மில்லியன் பெறுமதியுடைய ஊடுகதிர் இயந்திரமொன்று உரிய அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டிராததுடன் மீள கையேற்கும் போது முறையே கையேற்கப்பட்டிருக்கவில்லை.<br>இந்த இயந்திரம் அதன் பின்னர் விளைவற்று காணப்பட்டதுடன் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் நிச்சயிப்பதற்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1994 ஏப்ரல் 20 திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | சபையினால் மீளாய்வாண்டினுள் நிதி அளிப்பு ரூபா 2.1 மில்லியனும் பொருள் அளிப்பு ரூபா 8.0 மில்லியனும் ஆக கூட்டுத்தொகை ரூபா 10.1 மில்லியனான வெளிநாட்டு அளிப்பு பெறுவனவு திறைச்சேரி ஊடாக பெற்றுக் கொள்ளப்படாது நேரடியாக நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ஊடாக வழங்கப்பட்டுள்ள வழிக்காட்டி | நிதி அல்லாச் சொத்துக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 2.317.8 மில்லியன் ஆன நிதி அல்லாச் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் எதிர் வரும் ஆண்டின் சொத்துக்கள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 22.7 மில்லியன் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதறகு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3.9 மில்லியனாக காணப்பட்டமையினால் நிதி விளைவில் ருபா 26.6 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. திறைச்சேரி மீண்டெழும் நிதியேற்பாடு ரூபா 61 மில்லியனினால் குறைவடைந்தமை இந்த வீழச்சிக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அழிவு எதிர்ப்பு பரிசோதனை தேசிய நிலையத்தின் பல பிரிவுகளினால் (NCBNDT, Training unit மற்றும் Inspection body) அழிவு எதிர்பு தொடர்பான பாடநெறிகள் நடாத்துவதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் வெளி தரப்பினருக்கு பரிசோதனை சேவை வழங்கல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் அந் நடவடிக்கைகள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட இடைதேசிய தரம் இலங்கையினுள் | NDT சேவைகளின் பின்னர் பெற்றுக் கொடுக்கப்படும் NDT INSPECTION அறிக்கைகளின் செல்லுப்படித்தன்மை நிலைத்திருப்பது அது மேற்கொள்ளும் நபர்களின் தகைமையின் அடிப்படையில் மட்டுமாவதுடன் எந்தவொரு நபரொருவருக்கு அல்லது நிறுவனமொற்றிற்கு NDT சேவை மேற்கொள்வதற்கு தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அச் சேவையினை | அழிவு எதிர்ப்பு பரிசோதனை தொடர்பான பணிகள் ஒழுங்குப்படுத்துவதற்கு சுயாதீனமான நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டியதுடன் இடைதேசிய தரங்களின் செல்லுப்படித்தன்மைக்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடு உருவாக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டரீதியாக்குவதற்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடு வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு எந்தவொரு தடையும் இல்லாததுடன், அது ஒழுங்காக்கப்படுவதற்கு இதுரையில் உலகத்தில் இனங்கணப்பட்ட பிரயோக முறையொன்று இல்லை. | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் புதிய களனி பாலத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி கையகப்படுத்தப்பட்டமையினால் புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடம் அமைந்துள்ள காணியினை சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி காணியினை தெரிவுசெய்வதற்கு முன்னர் மாலபே பிரதேசத்தில் காணியொன்று தெரிவு செய்துக் கொண்டு புதிய களனி பாலம் நிர்மாணிப்பு செயற்திட்டத்தினால் சபைக்காக ரூபா 333.4 மில்லியன் செலவு செய்யப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கையில் பொது மக்கள் எதிர்ப்பினால் இடையே நிறுத்தப்பட்டமையினால் செலவு செய்யப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற செலவீனமாகியிருந்தது. மாலபே காணிக்காக பணம் செலுத்தும் போது பழைய கட்டிடம் அமைந்துள்ள காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிர்காலத்திற்கு செலுத்திய குத்தகை கட்டணம் ரூபா 7.7 மில்லியன் குறைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு குறைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த காணியின் சந்தை பெறுமதி ரூபா 116 மில்லியனும், 30 ஆண்டுகளுக்கான குத்தகை பெறுமதி ரூபா 75.5 மில்லியனும் அரசாங்க மதிப்பினை கருத்திற் கொள்ளப்படாது ரூபா 181 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | புதிய காணியின் உரித்து சுவீகரித்துக் ொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு வரைவு செய்யப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் மின்வலு மற்றும் அணுசக்தி சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் தேசிய பயிலுநர் சபையுடன் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காணியின் உரித்து முறையாக சுவீகரித்துக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட குத்தகை கட்டணம் தொடர்பாக குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 450 மில்லியன் பெறுமதியான கொபோல்ட் 60 மூலப்பொருட்களை உடைய 52 பென்சில்கள் தனித் தனியே இனங்காணப்படக் கூடிய வகையில் சரக்கிருப்பிற்கு எடுக்கப்பட்டிராததுடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது அப் பொருட்கள் பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | அவ் கொபோல்ட்-60 பென்சில்கள், அதிக கதிர்வீச்சினை கொண்டையினால் அண்மைக்கு சென்று பௌதீக ரீதியாக பரிசோதிக்க முடியாததுடன் நீர் தடாகத்தினுள் இந்த கதிர்வீச்சு பென்சில்கள் குறித்த ஷெல்பில் தாபிக்கப்பட்ட பின்னர் நீர் தடாகத்திற்கு மேல் இருந்து அவானிக்கப்பட முடியும். எதிர்காலத்தில் சரக்கிருப்பிற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக சரக்கிருப்பிற்கு எடுத்து உரிய முறைமையில் பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொங்கிரீட் பரிசோதனைக்காக 2018 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் ரூபா 1.7 மில்லினிற்கு கொள்வனவு செய்யப்பட்ட Concrete Core Drilling உபகரணம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2022 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை விளைவற்றதாக காணப்பட்டது. | கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்க-வில்லை | சொத்தின் தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் வினைத்திறனாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் வேலை நிறைவு செய்யப்பட்ட அழிவு எதிர்ப்பு பரிசோதனை தேசிய நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 308.6 மில்லியனாக காணப்பட்ட போதிலும் ரூபா 120.9 மில்லியன் அதாவது 39 சதவீத ஒப்பந்த முரணுடன் நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அரசாங்க பெறுகை வழிக்காட்டி 8.13.4 மற்றும் 2012 ஆகஸ்ட் 07 திகதிய 02/2012 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் ஒப்பந்த முரணிற்கு தேவைப்படுகின்ற அமைச்சரவை அங்கீகாரம் 2022 ஒக்தோபர் 28 ஆம் திகதி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>காணி கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் | இந்த ஐயவினா தொடர்பாக அமைச்சின் ஊடாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. | ஒப்பந்த முரண்கள் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குறித்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

கொடுக்கப்பட்டிருந்த ரூபா 84 மில்லியனை மிகைத்து காணியின் மதிப்பீடான ரூபா 85 மில்லியன் உள்ளடங்கலாக காணிக்காக ரூபா 90.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாம் நிதிக் கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காவிற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் கணக்கு ஆண்டு முடிவடைந்து 217 நாட்களுக்கு பின்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் உரிய காலத்தில் நிதிக் கூற்றுக்கள் குறித்த நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக உரிய வண்ணம் பாதீடு கணிக்கப்படாமையின் காரணத்தினால் செலவின விடயங்கள் 16 இன் கூட்டுத்தொகை ரூபா 3.7 மில்லியனால் செலவின எல்லையை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டெழும் செலவின விடயங்கள் 6 இன் மதிப்பிடப்பட்ட ஏறபாட்டில் 30 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் சாதகமான மாறுபாடுகள் (சேமிப்பு) அவதானிக்கப்பட்டது. | பாதீடு மற்றும் உள்ளவாரான செவினம் இடையே வேறுபாடு குறையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். | மிகவும் பிரயோகமாக பாதீடு கணிக்கப்பட வேண்டியதுடன் பாதீடு வினைத்திறனாக கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |